# அம்மா அம்மா அன்பான மரியே

அம்மா அம்மா அன்பான மரியே
உன் நாமம் பாடல் எந்நாளும் இனிதே

**1**
இதோ உன் தாய் என்று
யேசு சொன்னார் அன்று
நான் உன்னை அன்னை என்று
நாடினேன் துன்பம் தீர்ந்ததின்று

**2**
கதிரவன் ஒளி கொண்டு
நிலவொளி தருவதுண்டு
இறைவனின் அருள் கொண்டு
குறைகள் போக்க நீயுண்டு